www.newwisdomministries.com

# ஞா
# ன
# ஒ
# லி





## தக்க காலம் தக்கன தரும்

ஞானம் 6 - ஒலி 45 - 19.11.2023

# காலம் கனிந்தே தீரும்





## தலையங்கம்

அருட்பணி.இ.சைமன் பீட்டர்,
ஆசிரியர் – ஞான ஒலி

இயேசு கிறிஸ்துவுக்குள் பிரியமான எனதருமை சகோதர, சகோதரிகளே, உங்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துக்களையும், நல்வாழ்வுக்கான செபங்களையும் உரித்தாக்குகின்றேன்.

நாம் எதன்மீது கவனம் வைக்கின்றோமோ? அது நம்மை ஆட்கொண்டு, நம்மீதும், நமக்குள்ளும் பற்றிப் படரும். தன்னை நமக்குள் கரைக்கும், நம் உயிராகவும், வாழ்வாகவும் இரண்டறக்கலக்கும். அதன்பிறகு, அதுவாகவே நாம் மாறிவிடுவோம். அதன் பண்புகளும், சிந்தனைகளும் நமதாகிவிடும். அதுதான் ஈர்ப்பு விசையின் விளைவு. அது இரண்டு உயிர்களுக்கிடையே நிகழும் பரிமாற்றமாகட்டும், அல்லது ஒரு மனிதனுக்கும் மற்றொரு பொருளுக்கும் இடையே நடக்கும் உட்பொருத்தல் ஆகட்டும். அனைத்திலும் அதுவே நடக்கக்கூடிய இயற்கை நியதியாகும். துவக்கத்தில் பட்டும் படாமலும், விட்டகுறை தொட்ட குறையாகத்தான் இருக்கும். அதன்பிறகு. அந்த இரண்டில் எது அதிக ஈடுபாடு காண்பிக்கின்றதோ,ஈர்க்கின்றதோ அதுவே, அந்த உறவின் உயிர்ச் சத்தாக மாறி, அதை வளர்த்தெடுக்கும். அதன்பிறகு. அந்த பற்று உடும்புப் பிடியாக மாறிவிடும்.

எதுவும் தொட்டால் வளரும், விட்டால் தொடரும். அதுவே இந்த உலகின் உயிர்ப்பிணைப்பின் இரகசியம்.

அதன் முடிவு, அதன் தொடக்கத்தைப் பொறுத்தது. சில அநிச்சையாக நடக்கும், அல்லது, விழிப்போடு திட்டமிட்டு நடக்கும், அல்லது எது நடக்குமோ, அதுதான் நடக்கும். எது நடக்காதோ, அது நடக்கவே நடக்காது. எது நடந்தாலும், அதன் போக்கில், எது நடக்க வேண்டுமோ, அதை ஆரம்பித்தவரின் பொருட்டு அது நடந்தே தீரும்.

தீதும் நன்றும், பிறர்தர வாரா என்பதுதான் இயற்கையின் மாற்ற முடியாத நியதி.

அதுவும் இறைவன் எதை விரும்பினாரோ, அதுதான் நடக்கும். யோனாவின் தப்பியோடினாலும், இறுதியில், யோனாவினால், இறைப்பொறுப்பிலிருந்து தப்பிக்கவே முடியவில்லை.

யாரைக் கடவுள் தேர்ந்து கொண்டாரோ, அதுதான் அவரின் வாழ்வின் நோக்கமாகும்.

மு–நான் என்பவர் ஜப்பானின் மிகச்சிறந்த ஜென் துறவி. அவர் வழியாகத்தான் ஏராளமான ஜென் துறவிகள் தோன்றினார்கள். அவரின் துவக்கக்கால வாழ்வு, மிகவும் அருவருப்பானதாய் இருந்தது. ஆனால், அவர் மிகச்சிறந்த துறவியாக மாற உதவியவர், குடோ என்ற ஜென் குருவாகும். அது ஒரு சுவாரஸ்மான கதை.

குடோ அவர்கள் ஜப்பான் மாமன்னரின் ராஜ குருவாக இருந்தார். ஆனால், அவர் அரமணையின் ஆடம்பரங்களை விரும்பாது, அங்கு தங்காது, எப்போதும் நாட்டுக்குள்ளே அலைந்து திரியும் சித்தராக வாழ்ந்தார்.

ஒருமுறை அவர் ஒரு கிராமத்திற்குள் செல்லும்போது. அடைமழை. அந்த மழையில் தொப்பலாக நனைந்து கொண்டே தன் வழியில் சென்றார். அப்போது வழியோரத்தில் ஓர் ஓட்டைக்

குடிசையில் ஒரு வயதான பெண்மணி, மற்றும் ஒரு இளம் பெண்ணும் அவரது இரண்டு குழந்தைகளும், அமர்ந்திருந்தார்கள். அப்போது அந்த வயதான பாட்டி, குடோ அவர்களைப் பார்த்து, ஐயா, மழையில் இவ்வாறு தொப்பலாக நனைந்து கொண்டே போகிறீர்களே, இந்த குடிசையில் வந்து தங்குங்கள், மழை நின்றவுடன் உங்கள் பயணத்தைத் தொடரலாமே என்று அழைத்தார். அவரும் சரி என்று அந்தக் குடிசைக்குள் சென்று தங்கினார். அவர்கள் மிகவும் ஏழையாக இருந்தார்கள். இருந்தபோதிலும், அவர்களின் உணவில் சிறுது அவருக்குக் கொடுத்தார்கள். அவரும் அதை வாங்கி உண்டுவிட்டு. அவர்களின் இந்த பாராரிக் கோலத்திற்குக் காரணம் என்ன என்று வினவினார். அப்போது அந்த இளம் பெண், தன் கஷ்டத்தைக் கூறலானார்.

ஐயா, என் கணவர், ஒரு பெருங்குடிகாரர். எந்த வேலைக்கும் போவதில்லை. நான்தான் காட்டு வேலை செய்து என் அம்மாவையும், இந்தக் குழந்தைகளையும், என் கணவரையும் காப்பாற்றி வருகின்றேன். என் கணவர் குடிப்பதற்காக, வீட்டுப் பொருட்களையும் எடுத்துச் சென்று விற்றுக் குடிப்பார். குடித்துவிட்டு வீட்டுக்கு வந்தால், என்னையும், என் குழந்தைகளையும் போட்டு அடிப்பார். உதைப்பார். நாங்கள் அனைத்தையும் சகித்துக்கொண்டு வாழ்கின்றோம். எங்களுக்கு விடிவே கிடைக்காதா? என்று கண்கலங்கி தன் சோகக் கதையை எடுத்துச் சொன்னார். குடோ அவர்கள், அந்தப் பெண்மணியிடம் தனது அரச முத்திரை பதித்த மோதிரத்தைக் கொடுத்து, இந்த நாட்டு அரசரைப் போய்ப் பாருங்கள், இந்த மோதிரத்தை அவருக்குக் காண்பியுங்கள், அவர் உங்களுக்கு அரச வேலையும் தந்து உங்களுக்குத் தேவையானதைத் தருவார் என்று சொன்னார்.

அதன் பிறகு, சிறிது பணத்தைக் அந்தப் பெண்மணியிடம் கொடுத்து, கடைக்குச் சென்று, மதுவும், உணவும், திண்பண்டங்களும் வாங்கிவரச் சொன்னார். அவரும் அவர் சொன்னபடி அனைத்தையும் வாங்கித் தந்தார். அதன்பிறகு. அவர்கள் அனைவரையும் போய்ப் படுக்கச் சொல்லிவிட்டு, தியானத்தில் அமர்ந்திருந்தார். அப்போது நள்ளிரவில், அவளது கணவன் குடித்துவிட்டு தள்ளாடியபடி வீட்டுக்குள் வந்தான். மனைவியைக் கூப்பிட்டு அடியே, சாப்பாடு கொண்டாடி என்று கத்தினான். அப்போது, குடோ, அவனிடம், இந்தா, மது, சாப்பாடு, திண்பண்டங்கள் என்று கொடுத்தார். அவனும், தந்தோஷமாக ஏன் என்று கேட்காமல், உண்டு குடித்த பிறகு, மல்லாக்கப்படுத்துத் தூங்கிவிட்டான். காலையில் எழுந்தான். இரவில் என்ன நடந்தது என்பதை மறந்தவனாய், குடோவைப் பார்த்து, ஏய், யார் நீ? என் வீட்டில் என்ன செய்கிறாய்? என்று கத்தினான். குடோ அவர்கள் அமைதியாக, என் பெயர் குடோ, நான் இந்த வழியாக வந்தேன், மழைக்காக இந்த வீட்டில் தங்கிப்போக என்னை உன் குடும்பம் அழைத்தது. அதனால்தான் நான் இங்கு தங்கினேன். இதோ, இப்போது நான் கிளம்பிவிட்டேன் என்று புறப்படத் தயாரானார்.


குடோ அவர்களைப் பற்றி அந்த நாடே நன்கு அறிந்திருந்தது. அவனும் அவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தான். ஆனால், அவரை அதுவரைப் பார்த்ததில்லை, அப்போதுதான் முதன் முதலாக அவரை பார்க்கின்றான். அவன் அவரை நேரில் பார்த்ததும், பதறிப்போய் ஐயா, நீங்கள் யார் என்று தெரியாமல், உங்களை இவ்வாறாக நடத்திவிட்டேன், என்னை மன்னியுங்கள் என்று அவரின் காலில் விழுந்தான்.

அப்போது, அவர், அவனிடம், ஒவ்வொரு உயிருக்கும் ஒரு நோக்கம் இருக்கு. ஓர் உயிர் படைக்கப்பட்டதே, மற்ற உயிர்களை வாழ வைப்பதற்காகத்தான். ஆனால், உன்னை நம்பியிருக்கும் உன் குடும்பத்துக்கும் உன்னால் எந்தப் பயனுமில்லாமல், உனக்கும் எந்தவித பயனுமில்லாமல் வாழ்கின்றாயே? நீ வாழ்வதற்குப் பதில், உன்னை அழித்துக்கொண்டிருக்கிறாய், என்று சொல்லிவிட்டுத் தன் பயணத்தை ஆரம்பித்தார். அப்போது அந்த மனிதன், ஐயா, நான் வேண்டுமானால், உங்கள் துணி மூட்டையை சிறிது தூரம் தூக்கிவர அனுமதியும் என்றார். அவரும் அனுமதித்தார் அவனும் சிறுது தூரம் சென்றவுடன். சரிப்பா, போதும் என் மூட்டையைக் கொடு என்றார் அவர், அவன், ஐயா, ஒரு பத்து மைல்வரை இந்த சுமையை தூக்கிவர அனுமதியும் என்று கேட்டான், அவரும் சரி என்று நடக்கலானார். இவ்வாறு, அவர் மறுப்பது, அவன் அவரைக் கெஞ்சி அவரைத் தொடர்வதுமாக அப்பயணம் ஐந்து மைல்களைக் கடந்துவிட்டது. இறுதியாக, குடோ அவர்கள்,..அவனிடம்,..தம்பி...நீ வந்ததுபோதும், நீ திரும்பிப்போ என்றார். அதற்கு அவன்...ஐயா, .இனி நான் திரும்பிப்போக விரும்பவில்லை, நான் இப்படியே உங்களோடு இருக்க விரும்புகின்றேன் என்றார். அவரும் அவனது குடும்பத்திற்கு அரசன் வழியாக ஒரு நல்வாழ்க்கையை அமைத்துத் தந்துவிட்டதால்,...அவரும் சம்மதிதார். அவன்தான் அவரின் பிரதான சீடர் மு-நான். அவரைப் பின்பற்றிதான் ஏராளமான ஜென் துறவிகள் உருவானார்கள்.

நாம் உயர்வான ஒன்றிற்காகத்தான் படைக்கப்பட்டிருக்கின்றோம். ஒன்று அது நம்மை ஈர்க்கும். அல்லது அதைத் தேடி நாம் செல்வோம். அதுதான் ஈர்ப்பு விதி. அந்த ஈர்ப்பைத் தருவதும், அதை நிலைநிறுத்துவதும் கடவுள் துகளே.

# விவிலியம் அறிவோம்





## இஸ்ரயேலின் விழாக்கள்

இணைச்சட்டம் 16வது பிரிவு இஸ்ரயேல் மக்கள் கொண்டாடவேண்டிய முக்கியமான விழாக்களைப்பற்றிப் பேசுகிறது. இந்த விழாக்கள் பற்றி ஐந்நூல்களில் வேறு இடங்களிலும் பேசப்பட்டுள்ளன (விப 23:14-17; 34:18-23; லேவி 23; எண் 28-29). இணைச்சட்டம் நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ள இந்த விழாக்கள் திருப்பயண விழாக்களாகக் குறிக்கப்படுகின்றன. இஸ்ரயேல் மக்கள் மூன்று விழாக்களைத் திருப்பயண விழாக்களாகக் கொண்டாடவேண்டும் என இணைச்சட்டம் நூல் கூறுகிறது. அவை முறையே பாஸ்காவிழா அல்லது புளிப்பற்ற அப்பவிழா, வாரங்களின் விழா அல்லது பெந்தகோஸ்து விழா மற்றும் கூடாரத் திருவிழா ஆகும். இணைச்சட்டம் நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ள இஸ்ரயேலின் விழாக்கள்பற்றிய செய்திகள் தனித்தன்மை வாய்ந்தவை. ஐந்நூல்களில் ஏனைய இடங்களில் கொடுக்கப்பட்டுள்ள விழாக்களில் வருகின்ற கூறுகளைவிட இரண்டு சிறப்புக்கூறுகள் இணைச்சட்டம் நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ள விழாக்களில் கூறப்பட்டுள்ளன.

முதலாவதாக, இஸ்ரயேல் மக்கள் இந்த விழாக்களைத் திருப்பயண விழாக்களாகக் கொண்டாட வேண்டும். இரண்டாவது, இந்த விழாக்கள் ஆண்டவர் தேர்ந்தெடுக்கும் இடத்தில் கொண்டாடப்பட வேண்டும்.லேவியர் நூலில் கூறப்பட்டுள்ள சட்டங்களின்படி இஸ்ரயேல் மக்கள் வாழுகின்ற எந்த நகரிலும் ஆண்டவருக்குப் பலிகள் செலுத்தப்படலாம் (லேவி 23:3). இணைச்சட்டம் நூலில் காணப்படுகின்ற சட்டங்கள் இதைக் கட்டுப்படுத்துகின்றன. ஆண்டவர் தேர்ந்தெடுக்கும் இடத்தில்தான் ஆண்டவருக்குப் பலிகள் செலுத்தப்பட வேண்டும். எல்லா இடங்களிலும் வாழும் இஸ்ரயேல் மக்கள் ஆண்டவர் தேர்ந்தெடுக்கும் இடத்திற்கு வரவேண்டும். பிற்காலத்தில் எருசலேம் ஆண்டவரின் நகராகக் கருதப்பட்டது;

ஆண்டவரால் தேர்நதெடுக்கப்பட்ட இடமும் அதுவே.

இஸ்ரயேல் மக்கள் கொண்டாட வேண்டிய விழாக்களுள் முதலாவதாக வருவது பாஸ்காவிழா அல்லது புளிப்பற்ற அப்பவிழா. பாஸ்காவிழா அபீபு மாதத்தில் (மார்ச் - ஏப்ரல்) கொண்டாடப்பட்டது. அபீபு என்ற சொல் கானானியர்கள் நடுவில் பழக்கத்தில் இருந்தசொல் எனக் கருதப்படுகிறது. கானானியர்களுக்கு இதுவே ஆண்டின் முதல் மாதம். பிற்காலத்தில் இந்த மாதம் இஸ்ரயேல் மக்கள் நடுவில் நிசான் மாதம் என அழைக்கப்பட்டது. விப23:15 இல் அபீபு மாதம் புளிப்பற்ற அப்பவிழாவுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. எனவே பாஸ்கா விழாவை இரண்டு விழாக்களின் கூட்டாக அறிஞர்கள் கருதுகின்றனர். அவை முறையே புளிப்பற்ற அப்பவிழா மற்றும் வசந்தகால விழா. புளிப்பற்ற அப்பவிழா பயிர்த்தொழில் செய்து வாழ்ந்த விவசாயிகளிடம் தொடங்கியிருக்கவேண்டும். ஒவ்வொரு வருடமும் அறுவடைக்குப்பின் பழைய தானியங்கள் மாற்றப்பட்டு புதிய தானியங்களைச் சேமிப்பது வழக்கம். அறுவடைக்குப்பின் புதிய தானியங்களின் வரவு புளியாத அப்பத் திருவிழாவாகக் கொண்டாடுவதற்கு வழிசெய்கிறது. பாஸ்காவிழா ஆடு மேய்க்கும் இடையர்களோடும் தொடர்புடையது. குளிர் காலத்தில் கால்நடைகளுக்குப் புற்கள் கிடைப்பது கடினம்; எனவே இடையர்கள் தங்கள் கால்நடைகளுடன் ஓரிடத்தில் தங்கி ஓய்வெடுப்பார்கள். குளிர்காலம் மறைந்து வசந்தகாலம் தொடங்கும்போது தங்கள் தொழிலை மீண்டும் தொடங்குவார்கள். அப்போது ஓர் ஆட்டைப் பலியிட்டு அதை உண்பது வழக்கம். இந்த விழா வசந்தகால விழாவாக அறியப்பட்டது.

விடுதலைப் பயணம் நூலில் இந்த இரண்டு விழாக்களும் இணைக்கப்பட்டு, பாஸ்காவிழாவாக, இஸ்ரயேல் மக்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுவதன் நினைவாகக் கொண்டாடப்படுகிறது. இணைச்சட்டம் நூல் இந்த விழாக்கள் இணைந்து கொண்டாடப்படுவதை அப்படியே பதிவுசெய்கிறது. ஆனால் இந்த விழா ஆண்டவரால் தேர்ந்தெடுக்கப்படும் இடத்தில் கொண்டாடப்பட வேண்டும் எனக்கூறுகிறது. மோசே இதைப்பற்றிக் கூறுகையில், கடவுளாகிய ஆண்டவர் உனக்குக் கொடுக்கப்போகும் எந்த நகருக்குள்ளும் நீ பாஸ்காப் பலியைச் செலுத்த வேண்டாம். ஆனால் அவர்தம் பெயர் அதில் நிலைக்கும்படி, உன் கடவுளாகிய ஆண்டவர் தெரிந்தெடுக்கும் இடத்தில், நீ பாஸ்காப் பலியைச் செலுத்து, கதிரவன் மறையும் மாலை வேளையில், நீ எகிப்திலிருந்து புறப்பட்ட அந்த நேரத்தில், பலி செலுத்து (இச 16:5-6) எனக் கூறுகிறார். புளிப்பற்ற அப்பவிழா அல்லது பாஸ்கா விழாவின்போது ஏழாவது நாள் திருப்பேரவை கூடும் எனக் கூறப்பட்டுள்ளது. பண்டைய காலத்தில் சமய விழாக்களின்போது திருப்பேரவைக் கூடுவது வழக்கமான ஒன்று. திருப்பேரவை என்பது வழிபாட்டிற்காக அனைவரும் ஒன்றுகூடி வருவதைக் குறிக்கிறது. திருப்பேரவை கூடும் நாள் ஓய்வுநாள்;

எனவே மக்கள் வேலைகளைத் தவிர்த்து கூட்டத்தில் வந்து கலந்து கொள்ள வாய்ப்பிருந்தது.

இரண்டாவதாக கூறப்படுகின்ற விழா வாரங்களின் விழா. இந்த விழாவின் பெயர் விழாக் கொண்டாட்டத்தின் காலத்தைக் கணக்கிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது. பாஸ்கா விழாவிற்குப்பின் ஐம்பதாவது நாளில் இந்த விழா கொண்டாடப்படுவதால் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இந்த விழா பெந்தகோஸ்து விழா (திப 2:1) என அழைக்கப்பட்டது. இந்த விழாவும் அறுவடையை அடிப்படையாகக் கொண்டுதான் தொடங்கப்பட்டது. இந்த விழா கோதுமை, பார்லிபோன்ற தானியங்கள் அறுவடை செய்யும் காலத்தில், அதாவது ஜீன் மாதத்தில் கொண்டாடப்பட்டது (காண் இச 16:9). ரபிக்களின் மரபில் இந்த விழா சீனாய் மலையில் கடவுள் திருச்சட்டங்களைக் கொடுப்பதுடன் தொடர்புபடுத்தப்பட்டது. இணைச்சட்டம் நூலில் அந்தத் தொடர்பு காட்டப்படவில்லை. இச 16:12 இல் மக்கள் இந்தச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து வாழவேண்டும் என்பதற்காக இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்தது நினைவூட்டப்படுகிறது. மீண்டும் இணைச்சட்டம் நூலின் முக்கிய நோக்கம் ஆண்டவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்திற்கு மக்கள் திருப்பயணம் செய்யவேண்டும் என்பதாகும். அங்கே அவர்கள் உடன்படிக்கையைப் புதுப்பிக்க வேண்டும்; தன்னார்வக் காணிக்கைகள் செலுத்த வேண்டும்: ஆண்டவருக்குப் பலிசெலுத்தி மக்கள் மகிழ்ந்திருக்க வேண்டும். இந்த மகிழ்ச்சி அனைவரோடும் பகிர்ந்துகொள்ளப்பட வேண்டும். ஆண்டவர் மோசே வழியாகக் கூறுகையில், நீயும், உன் புதல்வர், புதல்வியரும், உன் ஆண் ஊழியர்களும் பெண் ஊழியர்களும், உன் நகரில் உள்ள லேவியனும் அன்னியனும் அனாதைகளும், கைம்பெண்களும் உங்கள் கடவுளாகிய ஆண்டவர் திருமுன் மகிழ்வீர்களாக என்கிறார்.


மூன்றாவதாக கூடாரத் திருவிழா கொண்டாடப்படுகிறது. இந்த விழாவும் அறுவடைத் திருவிழாதான். இவ்விழா இலையுதிர்க் காலத்தில் பேரீச்சை, ஒலிவம், திராட்சை மற்றும் ஏனைய பழங்கள் அறுவடை செய்யும் காலத்தில் கொண்டாடப்பட்டது. இலையுதிர்க் காலத்திற்குப்பின் மழைக்காலம் தொடங்கும். அப்போது விவசாய வேலைகளும் தொடங்கும். எனவே இந்த விழா அறுவடை முடியும் காலத்தில் கொண்டாடப்பட்டது. ஏழு நாள்கள் கொண்டாடப்பட்ட இந்த விழா விப 23:16 இல் சேகரிப்பு விழா என அழைக்கப்படுகிறது. பழங்கள் அறுவடை செய்யப்படும் காலத்தில் வேலையாள்கள் தற்காலிகமாகத் தங்குவதற்காகவும், பழங்களைச் சேகரித்து வைப்பதற்காகவும் கூடாரங்கள் அமைப்பது வழக்கம். இதன் அடிப்படையில் இந்த விழா கூடாரத் திருவிழா என அழைக்கப்பட்டிருக்கலாம். ரபிக்களின் மரபில் இந்த விழா இஸ்ரயேல் மக்கள் பாலைவனத்தில் கூடாரங்களில் வாழ்ந்ததுடன் தொடர்புபடுத்தப்பட்டது. இஸ்ரயேல் மக்கள் பாலைவனத்தில் பயணிக்கையில் தற்காலிகமாக

கூடாரங்களில் தங்கினார்கள். இணைச்சட்டம் நூலில் இந்தத் தொடர்பு வெளிப்படுத்தப்படவில்லை. விவசாயத் தொழிலுடன் தொடர்புடைய கூறுகள்தான் இப்பாடத்தில் அதிகமாகத் தெரிகின்றன. விடுதலைப் பயணம் மரபில் வருகின்ற எந்த நிகழ்வுடனும் இப்பகுதி தொடர்புபடுத்தப்படவில்லை. இணைச்சட்டம் நூலில் கூடாரத் திருவிழா திருப்பயண விழாவாக ஆண்டவர் தேர்ந்தெடுக்கும் இடத்தில் கொண்டாடப்பட வேண்டிய விழாவாகக் காட்டப்படுகிறது. இப்பிரிவில் இறுதியாக வரக்கூடிய இரண்டு சொற்றொடர்கள் (இச 16:16-17) இந்த மூன்று திருப்பயண விழாக்களும் ஆண்டவரால் தேர்ந்தெடுக்கப்படும் இடத்தில் கொண்டாடப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. இந்த விழாக்கள் நிலத்தில் விளையும் உணவு தானியங்களின் அபரிமிதமான விளைச்சலைக் கொண்டாடுவதால் திருப்பயணிகள் தங்கள் நன்றியைக் கடவுளுக்கு செலுத்தும் நோக்குடன் காணிக்கைகள் கொண்டு வரவேண்டும். இஸ்ரயேல் மக்கள் பல நாடுகளிலும் சிதறடிக்கப்பட்டு வாழ்ந்த காலத்தில் இந்தச் சட்டம் நிறைவேற்றமுடியாத ஒன்றாகத் தெரியலாம். ஏனெனில் எல்லா இடங்களிலும் வாழுகின்ற இஸ்ரயேல் மக்கள் காணிக்கைகளை ஏந்தியவர்களாகப் பயணம் செய்வது கடினம். இணைச்சட்டம் நூலில் வரக்கூடிய இந்தச் சட்டங்கள் பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டு திரும்பிவந்து வாழ்ந்த காலத்தில் உருவான ஒன்றாக இருக்கலாம் என அறிஞர்கள் கருதுகிறார்கள். ஏனெனில் அக்காலத்தில் யூதாநாடு எருசலேமை மையமாகக் கொண்ட ஒரு சிறிய நிலப்பரப்பைக் கொண்டதாக இருந்தது. எருசலேமைச்சுற்றி ஏறக்குறைய இருபது சதுரகிலோமீட்டர் தூரத்தை உள்ளடக்கியதாகவே யூதா இருந்தது. அந்தக் குறுகிய நிலப்பரப்பில் வாழ்ந்த மக்கள் எருசலேமுக்கு வந்து காணிக்கைகளைச் செலுத்துவது எளிதான ஒன்றாக இருந்தது. இந்தப் பழக்கம் தொடர்ந்தது. இயேசுவின் காலத்தில் பெந்தகோஸ்து விழாவின்போது மக்கள் பல்வேறு நாடுகளிலிருந்தும் காணிக்கைகளுடன் எருசலேமுக்கு வந்தார்கள் என வாசிக்கிறோம்.

பயணம் தொடரும்,

அருட்பணி ஆ. அலெக்ஸ் ஊஆகு






அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்
புனித.காணிக்கை அன்னை சபை, தாராபுரம்

# பொதுக்காலம் 33ம் வாரம் ஞாயிறு

19.11.2023

நீதி மொழிகள் 31/10-13, 19, 20, 30,31, 1 தெசலோனிக்கர் 5/1-6, - மத்தேயு 25/14-30

ஒருசமயம் மன்னரும் மந்திரியாரும் அரண்மனைத் தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்தார்கள். அந்நேரத்தில் அங்கு நின்றிருந்த மாமரத்தைக் காகம் ஒன்று வட்டமிட்டபடியே கா..கா..கா.. என்று கரைந்துகொண்டே பறந்துகொண்டிருந்தது. மன்னரும் மந்திரியாரும் அந்தக் காட்சியினை மிகவும் உன்னிப்பாகக் கவனித்தார்கள். உடனே மன்னர் மந்திரியாரை நோக்கினார்.

மந்திரியாரே! மரத்தை வட்டமடித்துக் கரைந்துகொண்டே செல்கிறதே காரணம் என்னவாக இருக்கும்? என்றார். மந்திரியார் சிறிது நேரம் சிந்தித்துவிட்டு, அரசே காகம் சுற்றி வட்டமடித்தபடி கா..கா..கா.. என்று கரைந்ததை நினைக்கும் போது, அது எதுவோ நம்மிடம் கேட்பதுபோல் தெரிகிறது. ஒருவேளை இந்த மரத்தில் தங்கியிருக்கும் ஏராளமான பறவைகளுக்கு இரை தரச்சொல்லி அது கேட்கிறதுபோலும் என்றார். உண்மைதான் மந்திரியாரே! இந்த நாட்டின் மன்னராக விளங்கும் நான் மக்களை மட்டும் காப்பாற்ற வேண்டும் என்ற கட்டாயத்தைக் கடந்து நாட்டில் உள்ள பறவைகள் விலங்குகள் போன்ற மற்ற ஜீவராசிகளையும் காப்பது என் கடமையல்லவா? என்றார். அதில் எந்த சந்தேகமும் இல்லை. இவைகளைக் காப்பது தங்கள் கடமைதான் என்றார் மந்திரியார். மறுநொடியில் மன்னர் அரண்மனைத் தோட்டத்தில் ஏராளமான தானியங்களைத் தூவினார். பறவைகளோ உடனே அங்கு வந்து இரைகளை எடுக்கத் தொடங்கின.

பயனற்ற ஊழியர்களை இனம் கண்டுகொள்ளவும்,அவர்களைத் தக்க இடத்தில் அமர்த்தவும், அகற்றவும் தெரிந்தவனே நல்ல தலைவன் ஆவான். வெறும் இலாபத்தை மட்டும் கருத்தில் கொள்ளாமல் சொல்லப்படாத கேட்கப்படாத மௌன ஓலங்களையும் கண்டுணர்பவராக இருக்க வேண்டும். நல்லவர்களை இனம் கண்டு கொள்பவராகவும் இருக்கவேண்டும்.

நம் ஆண்டவர் ஒருபுறம் நல்ல ஆயன் நானே. நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார் யோவா 10:11. அன்பு,

இரக்கம் பரிவுகொண்டிருக்கும் நல்ல தலைவராக, நல்ல ஆயராக இருந்தாலும், நடுத்தீர்க்க வரும் போது அவர் எதிர்பார்த்ததுபோல் இல்லை எனில் புறம்பே இருளில் தள்ளவும் தயங்க மாட்டார். வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார்: தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார் லூக் 1:52. என்பதை அன்னை மரியாளின் பாடலில் இருந்துநாம் அறியலாம்.

கடினஉள்ளத்தினர்

விதைக்காத இடத்தில் அறுவடைசெய்பவர்

தூவாத இடத்தில் விளைச்சலை சேகரிப்பவர்

என்று தலைவரை குறைகூறி;; தன்னை சரியானவன் என நிலைநிறுத்த முயல்கிறான் அந்தபயனற்றபணியாளன். எனவே அவனிடமிருந்த உள்ளதும் எடுக்கப்பட்டுஅழுகையும் அங்கலாய்ப்பும் நிறைந்த இருளில் தள்ளப்பட்டான். நல்ல பணியாளர்களுக்கு,


+நம்பிக்கைக்குரியநல்லபணியாளன் என்றபட்டம்

+ பெரியபொறுப்புகள்

+தலைவனின் மகிழ்ச்சியில் பங்கு

தலைவன் கடின உள்ளத்தினனாகவும் நேர்மையற்றவனாகவும் இருந்தாலும் உண்மை ஊழியனையும் பயனற்ற ஊழியனையும் இனம் காண்பவனாக இருக்கிறான். மேலே உள்ள கதையில் வரும் மன்னன் அதற்கும் ஒருபடி மேலே சென்று படைப்புகள் அனைத்தையும் பராமரிப்பவனாக உள்ளான். நம் இறைவன் அவனையும்விட இரக்கம் மிகுந்தவர் என்றாலும் தீர்ப்பு நாளில் அவரது அளவுகோல் நேராக நிற்கும் என்பதை உணர்வோம். வாழ்வோம்.





# பொதுக்காலத்தின் 33-ஆம் ஞாயிறு

நீமொ. 31 : 10-13, 19-20, 30-31
1தெச. 5 : 1-6, மத். 25 : 14-30

**19-11-2023**



பா. சேவியர்
திண்டுக்கல்

## திருப்பலி முன்னுரை

விழிப்போடும் அறிவுத்தெளிவோடும் வாழ வரம் வேண்டி வருகை தந்துள்ள ஒளியைச் சார்ந்தவர்களான அன்பு இறைமக்களே, உங்கள் அனைவரையும் பொதுக்காலத்தின் 33-ஆம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

நாம் பெற்றிருக்கும் உறவு, அறிவு, ஆற்றல், வசதி, வளம் மற்றும் அருட்சாதனங்கள் அனைத்தும் இறைவன் நமக்களித்த கொடைகள் என்னும் தாலந்துகள். இவற்றைத் தகுந்த முறையில் பயன்படுத்தி நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளராக வாழ நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

நாம் சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்கு உரியவர்களாக இருக்கிறோமா? கடவுள் நம்மிடம் கொடுத்ததைப் பலமடங்காகப் பெருக்கி வாழ்கிறோமா? என்ற கேள்விகளை முன்னெழுப்பி நம்மை சிந்திக்க அழைக்கிறது இன்றையத் திருப்பலி.

இன்றைய வார்த்தை வழிபாடு, உழைப்பே உயர்வைத் தரும், அதுவே மீட்பைக் கொடுக்கும் என்ற கருத்தை நம் நெஞ்சங்களில் விதைக்கிறது. அன்பையும் பண்பையும் அருந்துணையாய்க் கொண்டு வாழும் பெண்ணின் பெருமைகளைப் பேசுகிறது.

கடவுள் தந்த வரங்களையும், சந்தர்ப்பங்களையும் சரியாகப் பயன்படுத்தி நாமும் நமக்கு அடுத்திருப்போரும் முன்னேறவும்,அனைவரும் இன்புற்று வாழவும் வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

ஒவ்வொரு ஆண்டும் பொதுக்காலத்தின் 33-ஆம் ஞாயிறாகிய இன்றைய நாளை வறியோர் உலக நாளாகச் சிறப்பிக்க நம் திருத்தந்தை அழைப்பு விடுத்துள்ளார். உடை, உணவு, உறைவிடம், உரிமைகள் இன்றி வாடும் சக மனிதரைக் கருணையுடன் நேசிப்போம். நம்மிடம் உள்ளதை அவர்களுடன் பகிர்ந்து அவர்கள் வாழ்வில் ஒளியேற்றுவோம். அவர்களுக் காக இத்திருப்பலியில் சிறப்பாக மன்றாடுவோம்.

## முதல் வாசக முன்னுரை

நல்ல குணமுடைய பெண் யார் என்பது பற்றி சாமுவேல் என்ற அரசனுக்கு அவனுடைய தாயார் எடுத்துரைப்பதே இன்றைய முதல் வாசகம். கணவனோடு இணைந்து வாழ்தல், உழைத்து வாழ்தல், பிறருக்கு உதவி வாழ்தல், கடவுளுக்குப் பயந்து வாழ்தல் போன்ற மதிப்பீடுகளைத் தாங்கிவரும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

தூய பவுலடியார் தாம் நற்செய்தி பணி புரிந்த நேரம் போக மீதி நேரத்தில் கூடாரம் அடிக்கும் தொழில் மூலம் தன்னுடைய தேவைக்காகவும், தன்னோடு இருப்பவரின் தேவைக்காகவும் உழைப்பதை இன்றைய இரண்டாம் வாசகத்தின் வழியே விளக்கு கிறார். உழைக்க மனமில்லாதவன் உண்ணலாகாது என்ற வாழவியல் தத்துவத்தைக் கூறும் இவ்வாசகத் தைக் கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) ஞானமும் வல்லமையும் உடையவரான தந்தையே இறைவா, எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள் அனைவருக் காகவும் மன்றாடுகிறோம். நீர் அவர்களுக்கு வழங்கிய அருங் கொடைகளைத் திறமையாகப் பயன்படுத்தி, விழிப்போடும் அறிவுத் தெளிவோடும் செயல்பட்டு நற்கனி கொடுக்கின்ற நற்பணியாளர்களாய் வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடு கின்றோம்.

2) வளங்களையும் நலங்களையும் வாரி வழங்கும் வள்ளலே இறைவா, நீர் எமக்களித்த உறவு, அறிவு, ஆற்றல், வசதி, வளம் மற்றும் அருட் சாதனங்கள் என்னும் தாலந்து களைச் சரியாகப் பயன்படுத்தி நாங்களும் எமக்கு அடுத்திருப் போரும் உயர்ந்து வாழவும், உம்மோடு இணைந்து மகிழவும் அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடு கின்றோம்.

3) நற்பேறும் நலமும் அளிக்கின்ற தந்தையே இறைவா, குடும்ப அமைதி, உடல் நலம், விடுதலை வாழ்வு, குழந்தைப்பேறு ஆகிய வற்றிற்காக ஏங்கித் தவிக்கும் ஒவ்வொருவர் மீதும் கருணைகூர்ந்து, அவர்களின் ஏக்கத்தை நீக்கி, வாட்டத்தைப் போக்கி அவர்களின் தேவைகளை நிறைவு செய்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4) அருளின் ஊற்றான தந்தையே இறைவா, எமது பங்கில் உள்ள ஒவ்வொரு பெண்மணியையும் நிறைவாக ஆசீர்வதியும். தியாகத்தின் வடிவான அவர்கள் பண்பு பணிவு போன்ற அழகிய அணிகலன்களை அணிந்து, சாந்தம் அமைதி என்ற நிலையான பேரழகுடன் வாழவும், புனிதமும் நாணமும் கொண்ட நன்மையிலும் நன்மையான பெண்களாக, ஆலயத்தில் ஒளிரும் தூண்டாமணி தீபமாய் வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.



# பொன் மொழிகள் காட்டும் வாழ்வின் வழி

உங்களுக்கு அனைத்தும் எதிராக இருந்தாலும்
முன்னேறுவதற்கு ஏதாவது ஒரு காரணத்தைக் கண்டுபிடியுங்கள்

காது கொடுத்துக் கேட்கின்ற
கூர்ந்து கவனிக்கின்ற மற்றும்
ஆழமாக சிந்திக்கின்ற நபர்கள்
மிகவும் ஆபத்தானவர்கள். – புரூஸ் லீ

ஆழமான அறிவும், மிகத்தூய்மையான இதயமும் கொண்டவர்களால்
வலியையும், துன்பங்களையும் தவிர்க்க முடியாது. –ஃபியூடர் தஸ்தோவஸ்கி

துணிந்து, முன்னேறுபவர்களை நோக்கி
வெற்றி ஓடோடி வரும்


மற்றவர்களை அன்பு செய்வதற்குமுன்
முதலில் உங்களை அன்பு செய்யுங்கள்
அதுதான் பிறரன்பின் தரத்தை நிர்ணயம் செய்யும்

நிகழ்கால உங்களையும், எதிர்கால உங்களையும்
இன்றைய உங்கள் சிந்தனையும், செயல்களுமே நிர்ணயம் செய்யும்

இந்த உலகம் மிகவும் ஆபத்தானது, தீயவர்களால் அல்ல,
தீமையை வேடிக்கை பார்ப்பவர்களால்தான். – ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்

சிறந்த சாதனையாளர்கள் யாரைப் பற்றியும் புகார் செய்வதில்லை
அவர்களுக்குத் தங்களை உருவாக்குவதற்கே
நேரம் சரியாக இருக்கும்

# சங்க இலக்கியச் சுவை



திருமதி.லீமா விக்டோரியா
தமிழ் ஆசிரியை

சங்ககால அறங்கள் இயல்பானவை என்பதை சில சான்றுகள் வழியாக காணலாம்.

1. அறத்தில் வணிக நோக்கம் கொள்ளாமை:

அறம் செய்வதில் வணிக நோக்கம் இருக்கக் கூடாது என்பது சங்க கால மக்களின் கருத்தாக இருந்தது. இப்பிறப்பில் அறம் செய்தால் அதன் பயனை மறுபிறப்பில் பெறலாம் என்ற வணிக நோக்கு கூடாது எனக் கூறப்பட்டது.

இம்மைச் செய்தது சய்தது மறுமைக்கு ஆம்எனும்
அறவிலை வணிகன் ஆஅய் அல்லன் .

என்கிறது புறம். எனச் சங்க கால வள்ளல்களில் ஒருவரான ஆய் பற்றி ஏணிச்சேரி முடமோசியார் குறிப்பிட்டுள்ளார்.நோக்கம் இன்றி அறம் செய்வதே மேன்மை தருவது என்பது இதில் உணர்த்தப்பட்டுள்ளது.

அரசியல் அறம்:

சங்கப் பாக்களில் அறம் பற்றிய அறிவுரைகள் பெரும்பாலும அரசர்களை முதன்மைப்படுத்தியே கூறப்பட்டுள்ளன.

அறநெறி முதற்றே அரசின் கொற்றம், அறன் நெறி பிழையாத் திறனறி மன்னர் மன்னர்களுடைய செங்கோலும் வெண்கொற்றக் குடையும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன. அரசன் செங்கோல் போன்று நேரிய ஆட்சியை மேற்கொள்ள வேண்டும் என்பது பல பாடல்களில்

வலியுறுத்தப்பட்டுள்ளது.

நீர்நிலை பெருக்கி நிலவளம் கண்டு உணவுப் பெருக்கம் காண்பதும் அதனை அனைவருக்கும் கிடைக்க செய்வதும் அரசனின் கடமையாகச் சொல்லப்பட்டது. குற்றங்களை, அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்க வேண்டும் என்கிறார் ஊன் பொதிப் பசுங்குடையார். அரசன் அறநெறியில் ஆட்சி செய்வதற்கு அமைச்சரும் உதவினர்.

நன்றும் தீதும் ஆய்தலும் அன்பும் அறனும் காத்தலும் அமைச்சர் கடமை என்கிறது மதுரைக்காஞ்சி. செம்மை சான்ற காவிதி மாக்கள் என்று அமைச்சர்களை மாங்குடி மருதனார் போற்றுகிறர்.

## அறங்கூற வையம்:

அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணை புரிந்தன. அறம் கூறு அவையம் பற்றிஇ அறம் அறக்கண்ட நெறிமான் அவையம் என்கிறது புறநானூறு.

உறையூரில் இருந்த அற அவையம் தனிச்சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது. அங்குள்ள அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது.

## போர் அறம் :

தமிழர் போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையில் இருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரை பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு புறப்பாடல் கூறுகிறது . தம்மை விட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார். எறியார் எறிதல் யாவணது எறிந்தோர் எதிர் சென்று எறிதலும் செல்லாண் புறம் 301.

மீண்டும் மலரும்

லீமா விக்டோரியா
தமிழ் ஆசிரியை.

# திருக்குறள் வழங்கும் சமூக நெறி

## குறள் 70

மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்தந்தை
எந்நோற்றான் கொல்லெனும் சொல்



### குறள் விளக்கம்

மகன் தன் தந்தைக்குச் செய்யத்தக்கக் கைம்மாறு, இவன் தந்தை இவனை மகனாகப்பெற என்ன தவம் செய்தானோ? என்று பிறர் புகழ்ந்து சொல்லும் சொல்லாகும்.

### சிந்தனை

சமீபத்தில் வெளிநாடு சென்று திரும்பிய பெண்மணி ஒருவரைச் சந்திக்கச் சென்றிருந்தேன். தன் மகன் தன்னை அங்கு பல இடங்களுக்கு அழைத்துச் சென்றார் என்றார். செலவு அதிகமாகும் என்று மறுத்தபோதும் அம்மா உங்களை நான் இங்கெல்லாம் அழைத்து வரவேண்டும் என்று ஆசைப்பட்டேன். செலவு குறித்து வருந்தவேண்டாம் என்றார். தான் திட்டமிட்ட இடங்களுக்கு எல்லாம் தன்னை அழைத்துச் சென்றார். இந்த வெளிநாடு பயணத்தைக் குறித்து அந்தத்தாய் விவரித்தபோது அவரின் உணர்வுகள், கண்ணீர் மல்க வெளிப்பட்டன. இது அவரது மகிழ்வையும் மனநிறைவையும் வெளிப்படுத்தும் கண்ணீராக இருந்தது.

தந்தைக்குத் தாய்மொழிதவிர வேறொன்றும் தெரியாது. மகனோ பல மொழிகள் பேசி நாட்டுக்குநாடு பறந்து வருகிறார். தங்கள் பெற்றோரையும் அயல்நாடுகளுக்கு அழைத்துச் செல்கின்றார். வாழ்க்கையில் ஒருமுறை என் பெற்றோரை விமானத்தில் பயணிக்க வைப்பேன் என்று பல குழந்தைகள் எண்ணம் கொண்டுள்ளனர். நான் சமீபத்தில் சுவிட்சர்லாந்து சென்று வந்தேன் என் மகன் அழைத்துச் சென்றான் என தன்னிடம் வருவோரிடமெல்லாம் சொல்லி மகிழும் வயதானவர்கள் உள்ளனர். மேலும் அந்த நினைவுகளைப் புகைப்படங்களாக்கிப் பார்க்கும் பொழுதெல்லாம் மகிழ்ந்து நல்ல நினைவுகளை மனதில் பதித்துக் கொள்கின்றனர்.

இவர் தச்சருடைய மகன் அல்லவா? இவருடைய தாய் மரியா என்பவர் தானே? யாக்கோபு, யோசேப்பு, சீமோன், யூதா ஆகியோர் இவருடைய சகோதரர் அல்லவா? மத் 13:55. இயேசுவின் வாழ்வில், இவர் தச்சரின் மகன்தானே என்றவர்கள் பின்னாளில் இயேசுவின் வளர்ப்புத் தந்தைதான் யோசேப்பு என்று அடையாளம் காட்டும்நிலை வந்தது. இவர் மரியாளின் மகன் எனப்பட்டவர்,'இயேசுவின் தாய் மரியா என்ற நிலையை எய்தினார். உயர்நிலையடைந்து தாய் தந்தைக்கு பெருமை சேர்ப்போம்.



அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm

# அகத்தியர் வாக்கு



உணவை
சுருக்கி
சுவாசத்தை
உள்ளுள் பெருக்கி
ஐம்பூதங்களை
எழுப்பி
உடலை
அசையாமல்
தளர்த்தி
மனதை
மௌனத்தில்
நிறுத்திவர
உச்சந்தலையில்
உள்ள அமிர்தம்
உள்ளுள்
நுனி வழியாக
உனக்குள்
அபிஷேகம்
ஆவதைக்
காண்பாய்
மனமே